Since 1972

ஜெம்ஸ் சத்தம்

செப்டம்பர் 2015

திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி
வேறொன்றுக்கும் வரான்.
நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும்,
அது பரிபூரணப்படவும் வந்தேன்.

யோவான் 10:10

திருமுழுக்கு ஆராதனை

ஜெம்ஸ் சத்தம்

அன்பின் மடல்

God’s need is bigger than our need

பக்கம் - 2

பரிபூரண ஜீவன்

Our God prepares according to our needs.

பக்கம் - 9

ஜெம்ஸ் பாலிடெக்னிக் திறப்பு விழா

பக்கம் - 12

முன்னேற்றப் பணி அலுவலக முகவரிகள்

பக்கம் - 28

சிறுவரையும் முதியோரையும் சந்திக்கும் சத்தியம்

பக்கம் - 17

பணித்தளச் செய்திகள்

பக்கம் - 18

பதில் தா இறைவா!

பக்கம் - 29

அன்பின் மடல்

கிறிஸ்துவுக்குள் அன்பான ஜெபப் பங்காளரே,

நம்மை தன்னுடைய மகிமைக்கென்று உருவாக்கிப் படைத்து, நமக்கு தன் நாமத்தைத் தரிப்பித்து, இந்த ஜனத்தை எனக்கென்று ஏற்படுத்தினேன் என்று கூறி, தெரிந்துகொண்ட ஜனத்திற்காக புதிய காரியத்தினைச் செய்து, வனாந்தரத்தில் வழியை உண்டாக்கி, அவாந்தர வெளியில் ஆறுகளை உண்டாக்குவேன் என்று முழக்கமிடுகிற தேவாதி தேவனின் நாமத்தில் வாழ்த்துக்கள். (ஏசா. 43:7, 19-21)

அநேக நேரங்களில் நம்முடைய தேவைகளே நம்மை நடுங்கச் செய்து, நாடச்செய்து, நம்முடைய ஜெபங்களையும் அதற்கு நேராக வழிநடத்தி, தேவனுடைய தேவைகளைக் காணக்கூடா வண்ணம் நம்மை மாற்றிவிடுகின்றன.

இதனையே, அநேக ஊழியங்களும் ஊழியர்களும் மையமாகக் கொண்டு வசனங்களை அதற்கு ஏற்பத் தேடிக் கண்டுபிடித்து பிரசங்கித்து ஜெபிப்பதினால், **தேவ சபையின் சாரம் கெட்டு குறைந்துபோயிற்று** என்பது ஆராய்ந்து பார்த்தால் விளங்கும்.

"நம்முடைய தேவைகளை பரமபிதா அறிந்திருக்கிறார்" என்பது (மத். 6:32) **அநேகரால் மறக்கப்பட்ட உண்மை.**

ஆனால், தேவனுடைய தேவைகளை மனதில் கொண்டு காரியங்களை உற்று நோக்குங்கால், நம்முடைய தேவைகள் மிக மிகச் சிறிதானவை என்பதனைப் புரிந்துகொள்வது எளிது **(God's need is bigger than our need).** இந்த உண்மைதனை விளங்கிக்கொள்ள, 1சாமு. 1-16 அதிகாரங்களைத் தியானித்துப் பார்த்தால் நன்கு புரியும். அந்த தியானத்தினையே இம்மடலில் உங்களோடு பகிர்ந்துகொள்ள

வாஞ்சிக்கிறேன். இது **நம்மை முற்றிலும் வேறு கண்ணோட்டத்தில் வாழ்க்கையைப் பார்க்கவைத்துவிட வல்லமையுள்ளது**.

"அன்னாளை" உற்றுக் கவனியுங்கள். அவள் தேவை **உலகத்தின் கண்ணோட்டத்தில்** பெரியதே. ஒரு தனி மனிதத் தேவை எப்பொழுதுமே அப்படித்தான் தெரியும். அவளுக்குப் பிள்ளை இல்லாதது, அவளை விசனப்படுத்த மற்றவர்களுக்கு ஆயுதம் ஆனது உண்மைதான் (1சாமு. 1:6). மறுபடி மறுபடி அது நடப்பதினால், மனமடிவாக்கப்பட்டு சாப்பாட்டினையும் துறக்கச் செய்தது மெய்தான். (1சாமு. 1:7)

அவளது **தேவையைச் சார்ந்த ஜெபம்** ஊழியக்காரனையும் அவளைக் குறித்து தவறாகச் சிந்திக்க வைத்தது (1சாமு. 1:14); ஊழியனும் தன்னைப் புரிந்துகொள்ள முடியவில்லையே என்ற நோக்கில் மிகுதியான விசாரமும் கிலேசமும் அவளைப் பற்றிப்பிடித்ததை விவரிக்கிறாள் அவள் (வச. 16); அடுத்ததாக, **அவளைத் தள்ளாடப்பண்ணி** (1சாமு. 2:4), **நடையைத் தளர்த்தி ஆறுதலைக் காணாமல் செய்துவிட்டது**. புருஷனின் அன்பையும் அவளால் ஏற்றுக்கொள்ளமுடியவில்லையே. (1சாமு. 1:8)

தனி மனிதன் ஒருவன் தன் தேவைகளுக்கு முதலிடம் கொடுத்து கதற ஆரம்பிக்கும்போது, அவன் நிலைமை இதுவே. "அன்னாளுக்குப் பிள்ளை இல்லை" அது குறைதான்; ஆனால், அவள் பின்னால் 5 குழந்தைகளைப் (3 குமாரரும் 2 குமாரத்திகளும்) பெற்று கொஞ்சி மகிழ்ந்ததும் உண்டே.

என் தேவை மற்றவர்களுக்கு கேலிப் பொருளாக என்னை மாற்றிவிட்டதே என்ற மன அழுத்தம் இருக்கிறவர்கள் நிலை எப்படிப்பட்டதாக இருக்கும் என்பதனை அன்னாள் நன்றாகச் சித்தரித்துக் காட்டுகிறாள். பண்டிகை, பலகாரம், நன்றி அறிதல், காணிக்கை, தேவ பிரகாரம் அனைத்தையும் அது விழுங்கிவிடுகின்றது.

மாறாக, இந்தப் பிண்னணியத்தில் நடைபெறும் சம்பவங்களை உற்றுநோக்கினால், தேவனுடைய தேடும் பணியில் அவருடைய தேவை பெரிதாக மேலோங்கி நிற்பதனை நாம் காணமுடியும். அதனைப் புரிந்துகொள்ள தேவன் நம்முடைய மனக்கண்களைத் திறப்பாராக.

தேவ சந்நிதானத்தையும், தேசத்தின் நிலையையும், தேவ ஜனத்தின் காரியங்களையும் கொஞ்சம் பார்க்கலாம்.

"நான் என் உள்ளத்துக்கும் என் சித்தத்துக்கும் ஏற்றபடி செய்யத்தக்க உண்மையான ஒரு ஆசாரியனை எழும்பப்பண்ணி" (1சாமு. 1:2) என்ற தேவனுடைய அங்கலாய்க்கும் குரல் தேவன் தேடும் ஆசாரியனை நமக்குத் தெளிவாகக் காண்பிக்கிறது.

இஸ்ரவேலில் ஓர் பெரிய வெற்றிடம் (Vacuam) **காணப்படுகிறது**. ஆரோனின் சந்ததியில் இருந்து தோன்றியவர்களில் **தேவ உள்ளத்தினைப் புரிந்துகொண்டவர்கள் இல்லை, அவர் சித்தத்தினைச் செய்து முடிக்க ஆளில்லை**; **உண்மையில்லை**; அவருடைய சிந்தனையை இந்த பூமியில் காண்பித்துக்கொடுக்கத்தக்க மனிதனாக ஆசாரியன் இருப்பான் என்ற எதிர்பார்ப்புக்கு **ஏமாற்றம். எழும்பப்பண்ணினவர்கள் ஏமாற்றிவிட்டனரே என்ற ஏக்கக் குரல்**.

விசுவாச அறிக்கை செய்வோருக்கும் விசுவாச வார்த்தைகளைப் பேசி அற்புதங்களைக் காண விளைவோருக்கும் பஞ்சமில்லை. ஆனால் **(faith alone never can make you faithful).** நீ உத்தமமும் உண்மையும் உள்ளவன் என்று கூடவே தேவன் துடிக்கிறார்.

அற்புதங்கள் எத்தனை நடப்பித்தாய் என்பதனை விட சித்தம் தனைச் செய்துமுடித்தாயா? என்பதே கடைசி நாளில் கேட்கப்படும். (மத். 7:21-23)

அடுத்தபடியாக, தேவன் எதிர்பார்க்கும் மனிதன் அவரின் சத்தத்தினைக் கேட்கவும் புரிந்துகொள்ளவும், அதற்குக் கீழ்ப்படியத் தன்னை ஒப்புக்கொடுத்தவனுமாக இருக்கவேண்டுமே (Sensitive, Sensible and obedient). ஏலிக்கு தேவசத்தம் கேட்கவில்லை; மற்றவர்கள் வாயிலாக அது வந்தபோதும் கீழ்ப்படிய முடியவில்லை (1சாமு. 2:27); தேவன் பேசியும் பிரயோஜனமில்லை என்ற நிலையில் அன்று அவரின் சத்தத்தைக் கேட்க வல்லவனாயிருந்தது ஒரு சிறுவனே.

தன் சத்தம் கேட்கத்தக்கவனும் அதனைச் செய்து முடிக்க அல்லது கூறி அறிவிக்கக் கூடியவர்களும் தனக்குக் கிடைக்கமாட்டார்களா? என்றே தேவன் தேடிக்கொண்டிருக்கின்றார். இன்று கேட்கப்படும் அநேக ஆயிரம் குரல்கள் நடுவில், தேவ சத்தத்தினைக் கேட்கும் செவிதனைப் பெற்றவர் எத்தனை பேர்?

பர்வதங்களைப் பெயர்க்கிறதும், கன்மலைகளை உடைக்கிறதுமான பலத்த பெருங்காற்றிலே கர்த்தரின் சத்தம் இருப்பதில்லை; பூமி அதிர்ச்சியிலும் அவரின் சத்தம் உண்டாகவில்லை; அக்கினியும் அதனை வெளிப்படுத்தவில்லை; மாறாக, அமர்ந்த மெல்லிய சத்தம் உண்டாவதனை நாம் எலியாவின் வாழ்வில் காண்கிறோம் (1இராஜா. 19:11,12). **அது காத்திருப்போருக்கும், தனித்திருப்போருக்கும், தவித்து ஏங்கி நிற்போருக்கும் கிடைக்கும் குரல்**; **அதற்குத் தேவை ஏங்கும் இதயம்**. இதனை ஏந்திய மனிதர்கள் அவருக்குத் தேவை.

தொடர்ந்து பார்த்தால், அவர் எதிர்பார்க்கும் சுத்தக் கைகளைக் கொண்ட மனிதர்கள். சாமுவேலைப் பாருங்கள் “என்னைக் குறித்து சாட்சி சொல்லுங்கள். நான் யாருடைய எருதை எடுத்துக்கொண்டேன்?

யாருடைய கழுதையை எடுத்துக்கொண்டேன்? யாருக்கு அநியாயஞ் செய்தேன்? யாருக்கு இடுக்கண் செய்தேன்? யார் கையில் பரிதானம் வாங்கிக்கொண்டு கண்சாடையாயிருந்தேன்?" என்ற சவால் மிகும் வார்த்தைகள் (1சாமு. 12:3) **இன்று அநேக ஊழியர்களால் சொல்லக்கூடாமற்போயிற்றே**.

எங்கள் போதகம் வஞ்சகத்தினாலும், துராசையினாலும் உண்டாகவில்லை. அது கபடமுள்ளதாயுமிருக்கவில்லை. சுவிசேஷத்தை எங்களிடத்தில் ஒப்புவிக்கத்தக்கதாய் தேவன் எங்களை உத்தமரென்றெண்ணினபடியே, நாங்கள் மனுஷருக்கு அல்ல எங்கள் இருதயங்களைச் சோதித்தறிகிற தேவனுக்கே பிரியமுண்டாகப் பேசுகிறோம்.

உங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி, நாங்கள் ஒருக்காலும் இச்சகமான வசனங்களைச் சொல்லவுமில்லை. பொருளாசையுள்ளவர்களாய் மாயம்பண்ணவுமில்லை, தேவனே சாட்சி (1தெச. 2:3-5) என்பது பவுலின் வீர வார்த்தைகள் அல்லவா. அதனை ஏலியின் புத்திரர்கள் வாழ்வில் காணக்கூடாமற்போயிற்றே.

ஜெபிக்கும் மனிதனையும், ஜெபம் செய்யாவிட்டால் (ஜனங்களுக்காக) அது பாவம் என்று நினைப்பவனையும் தேவன் தேடுகிறார். "நானும் உங்களுக்காக விண்ணப்பம் செய்யாதிருப்பேனானால் கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ் செய்கிறவனாயிருப்பேன்; அது எனக்குத் தூரமாயிருப்பதாக. (1சாமு. 12:23)

ஜெபிப்பதோடு மட்டுமல்லாமல், நன்மையும் செவ்வையுமான வழியை நான் உங்களுக்குப் போதிப்பேன் என்கிறானே. **ஜெபிக்கிறவனுக்கு தேவனுடைய செம்மையான வழிகள் தெளிவாகத் தெரியும், விண்ணப்பம் பண்ணுகிறவன் நன்மையான பாதைகளை மற்றவர்களுக்குத் திறந்துதருகிறான்**.

ஏலியோ ஜெபிப்பவளையும் அடையாளம் கண்டுகொள்ளாத நிலைக்கு வந்துவிட்டான் (1சாமு. 1:13,14). "விண்ணப்பம் பண்ணுகிறவன் இல்லை" என்று கண்டு ஆச்சரியப்படுகிறவர் நம் தேவன் (ஏசா. 59:16). ஜெபிக்கிறவனை உடனடியாக அடையாளம் கண்டுகொள்பவர் அவர் (அப். 9:11). எத்தனை ஏக்கத்தோடு தேவன் இருக்கிறார் பாருங்கள்.

கூடவே, விழுந்துபோன ஒருவனுக்காக எத்தனையாய் துக்கத்தோடு இருக்கிறான் சாமுவேல். தன் சொந்தக் குமாரர்கள் விழுந்துபோனபோது இந்த துக்கம் ஏலியினிடத்தில் இல்லை. ஆனால், சாமுவேலின் துக்கம் அவனை வீட்டுக்குள் அடைத்தும் வைத்துவிட்டது. (1சாமு. 15:35; 16:1)

உன் சத்துரு விழும்போது சந்தோஷப்படாதே, அவன் இடறும்போது உன் இருதயம் களிகூராதிருப்பதாக; கர்த்தர் அதைக் காண்பார். அது அவர் பார்வைக்குப் பொல்லாப்பாயிருக்கும் (நீதி. 24:17,18) என்பது தேவவார்த்தை அல்லவா!

ஒருவன் பலவீனனானால் நானும் பலவீனனாகிறதிலையோ? ஒருவன் இடறினால் என் மனம் எரியாதிருக்குமோ? என்பதுதான் பவுலின் இதயத்தின் நினைவு (2கொரி. 11:29). தேவனின் இதயமும் இப்படித்தானே செயல்படுகிறது (ஓசி. 11:8). **இதே சிந்தையைத்தானே அவர் தம்முடையவர்களிடத்திலும் எதிர்பார்ப்பார்.**

தைரியம், அஞ்சாமை என்ற குணம் கொண்டவன், தேவனைப் பிரியப்படுத்த நினைப்பவன் தைரியமாய் அஞ்சாமல் நடக்கத் துணிவான். தேவ மனிதர்கள் அனைவரிலும் இதனைத் தெளிவாகக் காணலாம். **தலைவன் என்றோ, அரசன் என்றோ, ஆளுகிறவர்கள் என்றோ, அதிகாரிகள் என்றோ அவர்கள் காண்பதில்லை. குற்றம் செய்தவர் யாராயிருந்தாலும் பட்சமாதமின்றி கண்டிக்கவும் கடிந்துகொள்ளவும் அவர்கள் தயங்குவதில்லை. பாவம் செய்ய மாத்திரம் பயப்படும் மனிதனுக்கு வேறெதெனையும் குறித்து பயம் இருப்பதில்லை.**

உயிரோடு இருக்கும் நாளெல்லாம் பயமில்லாமல் ஊழியஞ்செய்யத்தானே அவர் நமக்காக வெளிப்பட்டார் (லூக். 2:71)

நான் இன்னும் மனுஷரைப் பிரியப்படுத்துகிறவனாயிருந்தால் நான் கிறிஸ்துவின் ஊழியக்காரனல்லவே (கலா. 1:10). இப்படிப்பட்டவர்களையும் தேவன் தேடிக்கொண்டேயிருக்கிறார்.

மேலும், மற்றவர்களை அபிஷேகத்தில் நடத்தி, அவர்களை தலைவர்களாக மாற்றி, அவர்களை மற்றவர்கள் அங்கீகரிக்கத்தக்கதாக திட்டங்களை வகுத்து, ஜனங்களுக்கு முன்பாக அறிமுகப்படுத்தி அழகுபார்த்து மகிழ்பவர்களையும் தேவன் தேடுகிறார்.

ஓடி ஒளித்திருந்த சவுலையும், வெளிப்படுத்த வெளிப்பாடு பெற்று (1சாமு. 10:22), “கர்த்தர் தெரிந்துகொண்டவனைப் பாருங்கள்” என்று அவனை உயர்த்திப் பேசும் விதத்தினைக் கவனியுங்கள் (1சாமு. 10:24).

ஆனால், **இன்றைய ஆவிக்குரிய உலகில் இப்படிப்பட்டவர்களைக் காண்பது அரிதாகிவருவதினால், தேவனுடைய தேவை பெரிதாகவே காட்சியளிக்கத் தொடங்குகிறது.**

இவைகள் சொல்லும் காரியங்கள் என்ன? **நம்முடைய தேவை ஒன்று தேவனின் தேவையோ.... ஒன்பது மடங்கு. புரிந்து கொண்டால் நம் ஜெபவாழ்வும், கண்ணோட்டமும் எத்தனையாய் மாறிவிடும்.**

ஜுலை மாதம் இலங்கை ஊழியத்தின்போது 200 ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையின் கீழ்கரையோரத்திற்கு ஊழியம் செய்ய வந்து மரித்த **தேவ மனிதர் வில்லியம் ஆல்ட்** (Rev. William Ault) என்ற ஒரு மெதடிஸ்ட் மிஷனரியின் வாழ்க்கை வரலாற்றின் ஒரு பகுதியைப் படிக்க நேரிட்டது.

7 வயது நிரம்பும் முன் 6 முறை வேதத்தினை வாசித்திருந்த அவரின் வாழ்வில் பிரசங்கியாய், சபை போதகராய் வாழ்ந்த அவர் இலங்கையைக்

குறித்து பாரப்பட நேரிட்டது. திருமணம் செய்து **சில நாட்களில்** (கிட்டத்தட்ட இரண்டு வாரத்திற்குள்) தன் புதுமணப் பெண்ணுடன் (சகோதரி சாரா) பாய்மரக்கப்பல் யாத்திரை மேற்கொள்ள ஆரம்பித்தார் இலங்கை நோக்கி. ஒரு சில நாட்களிலேயே துணைவியாரும் அவரும் கப்பலில் வியாதிப்பட்டனர். புயலில் மாட்டிக்கொண்டு கப்பலும் வியாதிப்பட்டதனைப் போன்றே காட்சியளித்தது. **புதுமணப் பெண் சில வாரங்களில் கப்பலிலேயே மரித்தார். திருமண வாழ்வின் இன்பங்களை அவர் அனுபவிக்கவில்லை.**

ஆயினும் இடைவிடா ஜெபமும், பாரமும் அவரை உந்தித் தள்ள தென்கரையில் வந்து தமிழ் கற்று 8 மாதங்கள் மாத்திரமே ஊழியம் செய்த அவர் அதற்குள் மரணத்தையும் சந்தித்தார். 8 பள்ளிகளையும் ஒரு கல்லூரிக்கான ஆரம்ப வேலைகளையும் செய்திருந்தவரின் மரணம் நமக்குப் புதிரானது.

தன் தேவையையே பெரிதுபடுத்தி அதற்கே முதலிடம் தந்து வாழ்வோரின் முன்னால், அதனை சாக்காகக் கொண்டு சுவிசேஷம் என்ற போர்வையில் இம்மைக்குரியவைகளையே பேசி அதற்காகவே தீர்க்கதரிசனங்களைக் கூறி மக்களை பூமிக்கடுத்தவைகளையே சிந்திக்கவைத்துவிட்ட அநேக ஊழியர்கள் மற்றும் ஊழியங்கள் மத்தியில், இப்படி வாழ்ந்தோரின் வாழ்க்கை நம்மை தட்டி எழுப்பட்டும். தேவனின் தேவையைப் பார்ப்போம்.

பீகாரில் நடக்கப்போகும் தேர்தல் (செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில்) களம் இப்போதே சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளது. 2016 -ல் நடக்கவிருக்கும் தேர்தலுக்கு தமிழகம் தயாராகவில்லையா? அரசியல்வாதிகளின் கண்களில் அதனைத் தவிர வேறொன்றும் தெரியவில்லை. பதவியை பெறுதலும், தக்கவைத்தலுமே குறியாக உள்ள இந்த பொதுநல சேவகர்கள் போலத்தான் அநேக வேளைகளில் நம்மவர்களும் செயல்படுகின்றனர். **பொருளாசை ஒரு பக்கம், பதவி மறுபக்கம் அவர்களை அலக்கழிக்கிறது.**

இளைஞர் சமுதாயமோ இன்டெர்நெட்டின் போரில் (cyber war) **திசைத் தெரியாமல் திக்குமுக்காடிக்கொண்டு அலைகிறது.**

இல்லறவாழ்வில் ஈடுபட்டவரோ, உல்லாச வாழ்விற்கு போதுமானதனைப் பெற வேகமாக செயல்படுகின்றனர்.

இறை ஊழியத்தில் உள்ளவரோ உலகத்தாரைக் காட்டிலும் மோசமாக செல்ல வழிதேடிக்கொண்டிருக்கின்றனர்.

ஆனால், ஆண்டவரை அறிந்தவர்களும் அவரை அறிவிக்க தன்னை சம்பூரணமாக ஒப்புக்கொடுத்தவர்களும் தாமரை இலைமேல் தண்ணீரைப் போன்ற வாழ்வு வாழ்ந்து தலைமுறைகள் ஆண்டவரைக்

காணக் தீவிரம் கொள்கின்றனர். அன்றாட தேவைகள் அனைவரையும் ஆட்டிப்படைக்கின்றது, ஆனாலும், கண்களை ஏறெடுத்துப் பார்ப்போம், ஆண்டவரின் தேவை நமக்குப் பெரிதாக தெரிய ஆரம்பிக்கட்டும். அவர் தேடிக்கொண்டேயிராமல் இதோ அடியவர்கள் இருக்கிறோம் **எங்களை நம்பும் என்று சொல்லுவோம்**, அர்ப்பணிப்போம், செயலில் வாழ்ந்து காட்டுவோம்; தேவன் அதில் பிரியமாயிருக்கிறார்.

தேவை தேவை என்று அலையும் மாந்தரின் மத்தியில்
தேவையோடு தேடும் தேவனைக் காண்போம் வாரீர்

உண்மையும் உத்தமமும் நீதியும் நியாயமும்
உள்ளத்தில் உதட்டில் உயிரில் காண்பிப்போம் வாரீர்

கறைபடா கரங்கள் கபடமில்லா இதயம்
கறையற்ற ஜீவியம் வாழ்ந்து காண்பிப்போம் வாரீர்

விண்ணப்பம் சேரட்டும் தேவ சிங்காசனத்தண்டை
விரும்பிட்ட காரியத்திற்காக அல்ல விழுந்தவர்களுக்காக

துல்லியமாய் அவர் குரல் கேட்கட்டும் செயலில்
துரிதமாய் செய்து முடிப்போம் அவர் சித்தம்

தூரம் நின்றவரையும் தூங்கி வழிவோரையும்
தூக்கி நிறுத்துவோம் அவர் விரும்பும் இடத்தில்

தேவன் தேடும் மனிதராய் வாழ்வோம் இந்த
தேசம் தேவனை அறிந்திட பின் சென்றிட

அன்பரின் அறுவடைப் பணியில்
அன்பு சகோ. D. அகஸ்டின் ஜெபக்குமார்

வானத்தையும் பூமியையும் படைத்த தேவன், தனது குணங்களை வசனங்களின் மூலமாக நமக்கு வெளிப்படுத்திவைத்திருக்கின்றார். அவரை நாம் அறிந்துகொள்ளவேண்டுமென்றும், அவரது செயல்களை ஒவ்வொரு நாளும் உணர்ந்துகொள்ளவேண்டுமென்றும், நமக்கு இருக்கும் புரிந்துகொள்ளுகின்ற சக்திக்கு ஏற்ப தனது குணத்தை கர்த்தர் வேதத்தில் எழுதித் தந்திருக்கின்றார். இவ்வுலகத்தில் வாழும் சாதாரணமான மனிதனிலும் சாதாரணமான மனிதனும் மற்றும் சிறுபிள்ளைகளும் கூட அவரை எளிதில் அறிந்துகொள்ளும்படியாகவே தன்னை வெளிப்படுத்தியிருக்கின்றார். வசனத்தின் ஆழத்திலும், அவரை அறிந்துகொள்ளுகின்ற ஆர்வத்திலும் அதிகமதிகமாய் நாம் அனுதினமும் முன்னேறுவோமென்றால், நம்முடைய சுபாவங்களில் மாற்றங்கள் உண்டாகும். இனிப்பினை அசைபோட்டு மென்று விழுங்குவதுபோல வசனங்களைத் தியானித்தால், வாழ்வில் மாற்றம் நிச்சயமே.

நமக்கு ஜீவனைக் கொடுப்பதுடன், பரிபூரண ஜீவனைக் கொடுப்பவர் நம் தேவன்.

கர்த்தரிடத்தில் திரும்புவோம் வாருங்கள்; நம்மைப் பீறினார், அவரே நம்மைக் குணமாக்குவார்; நம்மை அடித்தார், அவரே நம்முடைய காயங்களைக் கட்டுவார். இரண்டு நாளுக்குப்பின்பு அவர் நம்மை உயிர்ப்பிப்பார்; மூன்றாம் நாளில் நம்மை எழுப்புவார்; அப்பொழுது நாம் அவருடைய சமுகத்தில் பிழைத்திருப்போம். அப்பொழுது நாம் அறிவடைந்து, கர்த்தரை அடையும்படி தொடர்ந்து போவோம்; அவருடைய புறப்படுதல் அருணோதயம்போல ஆயத்தமாயிருக்கிறது; அவர் மழையைப்போலவும், பூமியின்மேல் பெய்யும் முன்மாரி பின்மாரியைப் போலவும் நம்மிடத்தில் வருவார். (ஓசி 6:1-3)

பீறப்பட்ட, அடிக்கப்பட்ட, காயங்களால் அவதிப்பட்டுக்கொண்டிருக்கின்ற மனிதர்களுக்கு **"கர்த்தரிடத்தில் திரும்புவோம் வாருங்கள்"** என்ற அழைப்பு விடுக்கப்படுகின்றது. "கர்த்தரிடத்திற்குப் போங்கள்" என்று சொல்லப்படவில்லை மாறாக, காயம்பட்ட மனிதர்களே சக மனிதர்களை கர்த்தரிடத்திற்குச் செல்ல அழைப்பு விடுக்கின்றனர். "அவரே நம்மை குணமாக்குவார், அவரே நம்முடைய காயங்களைக் கட்டுவார், அவரே நம்மை உயிர்ப்பிப்பார், அவரே நம்மை எழுப்புவார்." வாழ்க்கையில் நாம் எந்த நிலையில் காணப்பட்டாலும், "கர்த்தரிடத்திற்குத் திரும்புவோம் வாருங்கள்" என்ற அழைப்பு நமக்கும் உண்டு. அனுதினமும் நிகழும் பல்வேறு காரியங்களால் நாம் பீறுண்டுபோயிருக்கலாம், காயப்பட்டிருக்கலாம், களைத்திருக்கலாம் எனவே நாம் குணமாக்கப்படும்படி அவரிடத்திற்கே செல்லவேண்டியது நம் கடமை. அவரைத் தவிர காயங்களைக் குணமாக்க நமக்கு இவ்வுலகில் யாருமில்லையே. கர்த்தர் நம்மை குணமாக்கும்போது நமக்குப் புதுவாழ்வினையும் கொடுத்து நம்மை மீண்டும் உயிர்ப்பிக்கின்றார்.

உயிர்ப்பிக்கிறார் என்று சொல்லப்படுவதினால் அவர்கள் மரித்துப்போனார்கள் என்ற அர்த்தமல்ல மாறாக நல்ல சமாரியன் உவமையில் நாம் வாசிக்கிறதுபோல குற்றுயிராகக் கிடக்கின்ற ஜனம் இது. உயிரில்லாதவர்களைப் போல அவர்கள் வாழ்ந்துகொண்டிருந்தார்கள்; உயிரிருந்தும் நடைபிணமாயிருந்தார்கள்; நடப்பதற்குப் பெலனிருந்தும் அவர்களுடைய உள்ளமோ முற்றிலும் நொறுங்கிப்போனதாயிருந்தது, பீறுண்டதாயிருந்தது. யார் மூலமாகவோ நாம் அடிக்கப்பட்டிருக்கலாம், நொறுக்கப்பட்டிருக்கலாம், கர்த்தருடைய அனுமதியியினால் அவைகள் நம்முடைய வாழ்க்கையில் நடந்திருக்கலாம்; என்றாலும், குணமாகும்படி நாம் கர்த்தரிடத்திற்குத் திரும்புவோம்.

இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக உள்ளத்தில் ஏற்றுக்கொள்ளும்போது, நமக்குள்ளே புது ஜீவன் உண்டாகின்றது; எனினும், பரிபூரணமான ஜீவனைவிட்டு அநேகர் இன்றும் தூ ரமாயிருக்கிறார்கள். **"நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்"** (யோவான் 10:10) என்று இயேசு சொன்னாரே. இயேசுவை ஏற்றுக்கொண்ட பின்பு, வேலைகளினின் நிமித்தமாகவும், குடும்ப காரியங்களின் நிமித்தமாகவும், நண்பர்களின் நிமித்தமாகவும், பிள்ளைகளின் நிமித்தமாகவும், உடன் வேலை செய்வோரின் நிமித்தமாகவும், சமுதாயத்தின் நிமித்தமாகவும் உள்ளத்தில் உண்டான காயங்களினால் நிரம்பினவர்களாகக் நாம் காணப்படலாம். உடைத்துப் போடப்படவும், காயப்படவும், நொறுக்கப்படவும் கர்த்தர் நமது வாழ்க்கையில் அனுமதியளித்திருக்கலாம். எனினும், "கர்த்தரிடத்தில் திரும்புவோம் வாருங்கள்; நம்மைப் பீறினார், அவரே நம்மைக் குணமாக்குவார்; நம்மை அடித்தார், அவரே நம்முடைய காயங்களைக் கட்டுவார். இரண்டு நாளுக்குப்பின்பு அவர் நம்மை உயிர்ப்பிப்பார்; மூன்றாம் நாளில் நம்மை எழுப்புவார்" என்று நாம் கர்த்தரை நோக்கியே புறப்படவேண்டும்.

கீழே விழுந்து காயம் ஏற்பட்டு, காலில் சதை கிழிந்த நிலையில் காணப்படும் ஒரு குழந்தையினை மருத்துவரிடத்திற்குச் கூட்டிச் செல்லும்படி அழைத்தால், "மருத்துவர் ஊசி போடுவார், தைப்பார், டிஞ்சர் போடுவார் அது மிகவும் வலிக்கும், எனவே வரமாட்டேன்" என்றுதான் அக்குழந்தை மறுப்பு தெரிவிக்கும். ஊசியைக் கண்டு பயந்து நடுங்கும் குழந்தைகள் உண்டு. இந்த பயம் பீறுண்டு, காயப்பட்டுக் கிடந்த ஜனத்தினிடத்திலும் காணப்பட்டது; என்றாலும், **"அவருடைய புறப்படுதல் அருணோதயம்போல ஆயத்தமாயிருக்கிறது; அவர் மழையைப்போலவும், பூமியின்மேல் பெய்யும் முன்மாரி பின்மாரியைப் போலவும் நம்மிடத்தில் வருவார்" என்ற அறிவு அவர்களுக்கு ஆறுதலைத் தந்தது**. முன்மாரி பூமியை ஆயத்தப்படுத்துகின்றது; பின்மாரியோ விளைச்சலை ஆயத்தப்படுத்துகின்றது. நம்முடைய தேவைகளை முன்னறிந்து, முன்னதாகவே நமக்கானவைகளை ஆயத்தப்படுத்துகிறவர் நம் தேவன். **Our God prepares according to our needs.** முன்மாரி விதையை முளைத்தெழும்பச் செய்யும், பின்மாரியோ, விளைந்து நிற்கும் பயிர் முழுமை நிலையை அடையும்படிச் செய்யும். "விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிறவர்" என்று இயேசுவைக் குறித்து எபிரேய நிருப ஆக்கியோன் எழுதுகின்றார்.

அப்படியே பவுலும், **"உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசுகிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்திவருவாரென்று நம்பி**, நான் உங்களை நினைக்கிறபொழுதெல்லாம் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்" (பிலி 1:5,6). நமக்கு ஜீவனைக் கொடுத்தவர், நாம் பரிபூரண ஜீவனைப் அடையும்படியும் நம்மை நடத்திச் செல்வார். இப்பொழுதோ, ஒருவேளை நாம் அடிக்கப்பட்டிருக்கலாம், காயப்படுத்தப்பட்டிருக்கலாம், பீறுண்டிருக்கலாம், ஆனால் கர்த்தரிடத்திற்குப் புறப்பட்டுச் செல்லும்போது அவர் மழையைப்போல நம்மிடத்திற்குப் புறப்பட்டு வருவார். எனவே யாக்கோபும் தனது நிருபத்தில், **"தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார்"** (யாக். 4:8) என்று ஆலோசனையாக எழுதுகின்றார். ஆனால், பலரிடத்திலோ, "நீங்கள் ஏன் ஆலயத்திற்கு இன்று வரவில்லை?" என்று கேட்டால்" "மனதுக்குச் சரியில்லை, காயப்பட்டிருக்கிறேன், அதனாலேயே வர விரும்பவில்லை" என்று பதில் சொல்லுவார்கள்.

யாரோ ஒருவர் ஏதோ சொல்லிவிட்டதால் பாரப்பட்டு, துக்கமடைந்து, காயமடைந்து தேவனைத் தேடிவரவேண்டிய நேரத்திலோ அநேகர் வீட்டிலேயே இருந்துவிடுகின்றனர். காயப்பட்டிருக்கிறீர்களா? பீறுண்டிருக்கிறீர்களா? தேவனைத் தேடிவாருங்கள். முன்மாரியைப் போலவும், பின்மாரியைப் போலவும் உங்களைச் சந்திக்க வர கர்த்தர் ஆயத்தமாயிருக்கிறார். உங்களுக்கு பரிபூரண ஜீவனைக் கொடுக்க அவர் போதுமானவர்.

ஜெம்ஸ் பாலிடெக்னிக் திறப்பு விழா

பீஹார் மாநிலம், ஔரங்காபாத் பணித்தளத்தில் புதிதாகக் கட்டப்பட்ட ஜெம்ஸ் தொழில்நுட்பக் கல்லூரியின் (GEMS Polytechnic)திறப்பு விழா நிகழ்ச்சி ஜுலை 27 அன்று மாலை சிறப்பாக நடைபெற்றது. ஜெம்ஸ் ஊழியர்கள், பணித்தள விசுவாசிகள் மற்றும் அப்பகுதி வாழ் மக்கள் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர். ஜெம்ஸ் இயக்குநர் Dr. அசோக்குமார் ஜெபித்து நிகழ்சியினைத் தொடங்கிவைக்க, தொடர்ந்து சிக்கரியா ஜெம்ஸ் ஆங்கிலப் பள்ளியின் முதல்வர் சகோ. டேனியல் ஜான்சன் சிறப்பு விருந்தினரையும் மற்றும் விழாவுக்கு வருகை தந்திருந்தோரையும் வரவேற்றுப் பேசினார். ஜெம்ஸ் ஆங்கிலப் பள்ளி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள், நடனங்கள் மற்றும் குறுநாடகங்கள் விழாவுக்கு அழகு சேர்த்ததுடன், தேவ நாமத்தையும் மகிமைப்படுத்தின.

விழாவின்போது பேசிய சகோதரர் அகஸ்டின் ஜெபக்குமார், 1972 -ம் ஆண்டு உலகப்பணியிலிருந்த தன்னை உன்னதருக்காகப் பணி செய்ய கர்த்தர் பீஹார் மாநிலத்திற்குத் தன்னை அழைத்ததையும், அழைப்பினைத் தொடர்ந்து, ஆண்டவரை அறிவிக்கும் பணியினையும், கல்வி, மருத்துவ மற்றும் மனிதாபிமானப் பணிகளை இந்நாள்வரை உடன் ஊழியர்களுடன் பீஹாரில் தொடர்ந்து செய்துவருவதையும் எடுத்துரைத்தார். “தூக்கத்தில் காண்பது அல்ல, நம்மை தூங்கவிடாமல் தடுப்பதே சொப்பனம்” என்ற மறைந்த முன்னாள் இந்திய குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் அவர்களின் வரிகளையும் ஞாபகமூட்டினார். தொடர்ந்து, சிறப்பு விருந்தினர்கள் ஜெபித்து கல்லூரியைத் திறந்துவைத்தனர்.

சுவிசேஷகர் சகோ. சாண்டி மற்றும் சிறப்பு விருந்தினர் சகோ.ஆஸ்வின் தேவ் தைரியம் ஆகியோர் மாணவர்களுக்கு உற்சாகமூட்டும் உரையாற்றி விழாவினை சிறப்பித்தனர். இறுதியாக, ஜெம்ஸ் தொழில்நுட்பக் கல்லூரியின் முதல்வர் திரு. ஆனந் ஜெயசிங் நிகழ்ச்சியில் பங்கேற்றோர்க்கு நன்றி தெரிவித்தார். தொடர்ந்து நடைபெறும் கல்லூரியின் மாணவர் சேர்க்கையில் மாணவர்களின் எண்ணிக்கையும் வளர்ந்து வருகின்றது. இதுவரை 90 மாணவர்கள் கல்லூரியில் சேர்ந்துள்ளனர். அர்ப்பணமிக்க ஊழியர்களைக் கொண்டு, கல்வி அறிவினையும் அத்துடன் ஆண்டவரின் அன்பினையும் மாணவர்களுக்கு அறிவித்துவிடவேண்டும் என்ற தரிசனத்துடன் இக்கல்லூரிப் பணியினைத் தொடருகின்றோம். **அது கர்த்தராலே ஆயிற்று, அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது** (சங் 118:23).

ஜெம்ஸ்
பாலிடெக்னிக்
SINCERITY
SIMPLICITY
SANCTITY
SACRIFICE
SERVICE
CAFETERIA

ஜெம்ஸ் பாலிடெக்னிக்

திறப்பு விழா

மாணவர்கள் மற்றும் ஊழியர்கள்

சிறுவரையும்

முதியோரையும்

சந்திக்கும்

சத்தியம்

சிறுவரையும் முதியோரையும் சந்திக்கும் சத்தியம்

சிறுவர் துறை ஊழியர்களை உற்சாகப்படுத்தும்படியாக **மூன்று நாள் கூடுகையினை** நடத்தினோம். உபவாசத்துடன் தொடங்கிய இக்கூடுகையில் பங்கேற்ற ஊழியர்கள் ஒவ்வொருவரும் ஒருமனதாக சிறுவர்கள் மத்தியில் நிறைவேற்றப்படவேண்டிய ஊழியங்களுக்காக திறப்பில் நிற்கவும், தங்களை அர்ப்பணிக்கவும் தேவன் கிருபை செய்தார். சகோதரி ஜூலி ஆனந் 2016 -ம் ஆண்டு செய்யவிருக்கும் விடுமுறை வேதாகமப் பள்ளி ஊழியங்களைக் குறித்தும், சகோ. அசோக்பால் இளைஞர் ஊழியத்தின் வருங்கால திட்டங்கள் குறித்தும், சகோ. சச்சின் ஞாயிறு பள்ளிகளில் கிறிஸ்தவப் பிள்ளைகள் மத்தியில் ஏற்படுத்தப்படவேண்டிய மாற்றங்கள் குறித்தும் மற்றும் சகோ. தேவ்முனி ஜெம்ஸ் DCC (Day Care centre) பள்ளிகளில் நிறைவேற்றப்படவேண்டிய ஊழியங்கள் குறித்தும் சக ஊழியர்களோடு கலந்தாலோசிக்கவும, திட்டங்களைத் தீட்டவும் தேவன் நல்வாய்ப்பினைக் கொடுத்தார்.

ஜுலை மாதம் முதல் சேவா பாரத் ஊழியர்களுடன் இணைந்து சிக்கரியா (பீஹார்), சந்துவா (ஜார்க்ண்ட்) மற்றும் வாரனாசி (உ.பி) ஆகிய பணித்தளங்களில், 180 ஊழியர்களுக்கு **நான்கு நாட்கள் ஊழியப் பயிற்சியினை** அளித்தோம். புதிய பாடல்கள், செயல்முறைகள், வசனங்களுடன் விளையாட்டுகளும் மற்றும் குறுநாடகங்களையும் ஊழியர்களுக்குக் கற்றுக்கொடுத்தோம். மேலும், கயா, குது, லத்திஹார், கர்வா, நவாதா மற்றும் கட்டெளலி போன்ற ஆறு மாவட்டங்களில் **முதியோர் கல்வித் திட்டங்களைச்** செயல்படுத்தி, அதற்கான உபகரணங்களை வழங்கினோம். இதன் வாயிலாக, 1260 எழுத்தறிவற்ற முதியோர்களுக்கு எழுத்தறிவு கொடுத்து, அவர்களுக்கு சுவிசேஷத்தையும் அறிவிக்கவிருக்கிறோம்.

- ☐ **எல்லாப் பகுதிகளிலும் ஒருநாள் தன்னார்வல ஊழியர் கூடுகை**
- ☐ **ஜெம்ஸ் மற்றும் தனியார் பள்ளிகளில் தொடர் சந்திப்பு முகாம்**
- ☐ **காப்பகச் சிறுவர்களுக்கான ஆவிக்குரிய கூட்டங்கள்**
- ☐ **அரசாங்க மற்றும் தனியார் பள்ளிகளில் 'Reaching the Girls' நிகழ்ச்சி**
- ☐ **ரக்சோல் சிறுவர் முகாம்**

இவைகளின் மூலமாக தொடருகின்றது நமது இறைப்பணி.

பணித்தளச் செய்திகள்

PEACE III கோட்டம்

செப்டம்பர் 01 **ரக்ஸால்**

ஹஜ்மாடோலா, பன்டோக்கா, தரம்நகர், பைரியா, பவன்ஹரி, சயாம்பூர், லஷ்மிப்பூர், கன்னா, சுந்தர்ப்பூர், டுமரியாடோலா ஆகிய கிராமங்களில் சுமார் 250 பேருக்கு சுவிசேஷக் கைப்பிரதிகள் மற்றும் புதிய ஏற்பாடுகள் விநியோகித்து சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. இப்பகுதியில் சுவிசேஷத்திற்கு ஆர்வம் காட்டியவர்கள் மத்தியில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. கன்னாபூர், லஷ்மிபூர் ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட இரவு கூட்டத்தின் வாயிலாக சுமார் 200 பேருக்கு சுவிசேஷம் கடந்து சென்றது. சரீர பெலவீனமாகயிருந்த பிரேம்குமாரின் தங்கை ஜெபத்தினால் சுகமானார். வீட்டைவிட்டு காணாமல் போன வசந்தியின் மகன் மீண்டும் வீடுதிரும்பவும் மற்றும் இப்பணித்தள ஊழியருடைய தாயாரின் காலில் நீண்ட நாட்களாக காணப்படும் புண் சுகமாகவும் ஜெபியுங்கள்.

செப்டம்பர் 02 **பெத்தியா**

இக்கோட்டத்தின் தலைமையிடமாக இப்பணித்தளம் செயல்பட்டு வருகிறது. சுமார் 100 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட ஆலயம் புதுப்பிக்கப்பட்டு ஆராதனை நடத்தப்பட்டு வருகிறது. விடுமுறை வேதாகம வகுப்பில் சுமார் 250 சிறுவர்கள் தொடர்ந்து 3 நாட்களாக கலந்து கொண்டு வேத வசனத்தைக் கற்றுக்கொண்டார்கள். இங்கு நடத்தப்பட்ட ஞானஸ்நான ஆராதனையில் 5 பேர் திருமுழுக்குப் பெற்றார்கள். 14 வருடங்களாக பிசாசின் பிடியில் இருந்த ஹர்டியா கிராமத்தைச் சேர்ந்த குந்திதேவி இயேசுவின் நாமத்தில் விடுதலையானார். இயற்கையின் (பூகம்பம்) அழிவுக்கு இப்பகுதி மக்களை தேவன் விலக்கிப் பாதுகாத்தார். சிறுவர் காப்பகத்தில் தங்கி பராமரிக்கப்பட்டுவருகிற சிறுவர்களுக்காகவும், படக்காட்சி வாயிலாக

சுவிசேஷம் அனைத்து கிராமங்களிலும் முழுமையாக அறிவிக்கப்படவும் மற்றும் இப்பணித்தள ஊழியருடைய சகோதரிகளின் இரட்சிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

செப்டம்பர் 03 ராம்நகர்

பஹூவாரி, பகஹி, பலுவா, பக்ராஹா, பரசௌனி, ராம்நகர் ஆகிய 6 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு, வீடுகள்தோறும் புதிய ஏற்பாடு விநியோகிக்கப்பட்டது. உபவாசக் கூடுகை, வாலிபர் சிறப்புக் கூடுகை சிறப்பாக நடத்தப்பட்டது. 2 இடங்களில் நடத்தப்படுகிற வீட்டுசபை ஆராதனையில் 22 பேர் கலந்து கொள்கிறார்கள். பிசாசின் கிரியையினால் பாதிக்கப்பட்டு வாழ்க்கையில் நிலைகுலைந்துபோன குசும்தேவிக்கு கிடைத்த விடுதலைக்காகவும், நீண்ட நாட்களாக வயிற்று வலியினால் பாதிக்கப்பட்டிருந்த பகவத்குமாரிக்குக் கிடைத்த சுகத்திற்காகவும் துதியுங்கள்! பின்மாற்றத்தில் சென்றுள்ள விசுவாசிகளுக்காகவும், ஊழியத்திற்கு விரோதமாகக் காணப்படும் மறைமுக எதிர்ப்புகள் மாறவும் ஜெபியுங்கள்.

செப்டம்பர் 04 ஜக்தீஷ்பூர்

தெருப்பிரசங்கத்தின் வாயிலாக 60 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. சக்கிரியா, நாராயண்பூர், ராம்நகர், டெட்டி ஆகிய இடங்களில் 48 பேருக்கு பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. ஜெட்வார் கிராமத்தில் 35 பேர் ஆராதனையில் கலந்து கொண்டார்கள். இப்பணித்தள சபையில் நடத்தப்பட்ட விடுமுறை வேதாகமப்பள்ளியில் கலந்துகொண்ட 120 சிறார்களுக்கு பாடல் மற்றும் வசனம் கற்றுக் கொடுக்கப்பட்டது. 2 நாட்கள் நடத்தப்பட்ட கன்வென்ஷன் கூட்டத்தில் 150 பேர் கலந்து கொண்டார்கள். திருவசனத்திற்கு கீழ்படிந்திருந்த 6 பேர் திருமுழுக்குப்பெற்று தேவனுடைய திருநாமத்தை மகிமைப்படுத்தினார்கள். இப்பணித்தள ஊழியருடைய மகள் 10வது வகுப்பு பொதுத் தேர்வில் பள்ளியில் முதல் மாணவியாக தேர்ச்சிப் பெற்றுள்ளார். சிவ்நாராயண், லால்பரிதேவி தம்பதியினருக்கு சந்ததியைக் கொடுத்து தேவன் ஆசீர்வதிக்கவும், இப்பணித்தள ஊழியரின் மனைவியின் சரீர சுகத்திற்காகவும் ஜெபியுங்கள்.

செப்டம்பர் 05 நௌத்தன்

7 இடங்களில் சுவிசேஷக் கைப்பிரதிகள் விநியோகித்து சுமார் 500 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. சுவிசேஷத்திற்கு ஆர்வம் காட்டியவர்கள் மத்தியில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டு வருகிறது. சபையில் நடத்தப்பட்ட வாலிபர்கள் கூடுகையில் 12 பேர் கலந்து கொண்டனர். 3 இடங்களில் இரவு ஜெபக் கூடுகை நடத்தப்பட்டது. சாபத்தினால் சமாதானம் இல்லாதிருந்த சாஜன்ராம் என்பவரது குடும்பத்தில் ஜெபத்தால் தேவன் சமாதானத்தைக்

கொடுத்தார். குந்திதேவி மகளுடைய திருமணம் குறைவில்லாமல் ஆசீர்வாதமாக நடைபெற்றது. வியாதிப்பட்டிருந்த சிங்காசன்ராமின் மனைவி விசுவாசமுள்ள ஜெபத்தால் சுகமானார். ஞானஸ்நானத்திற்கு ஒப்புக்கொடுத்துள்ள ஊர்மிளாதேவிக்காகவும், இப்பணித்தள ஊழியருடைய தாயாரின் சுகத்திற்காகவும் ஜெபியுங்கள்.

செப்டம்பர் 06 மஜ்ஹௌலியா

5 இடங்களில் வீட்டுசபை ஆராதனை தடையின்றி நடத்தப்பட்டு வருகிறது. நற்செய்திக் கூட்டத்தின் வாயிலாக 200 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. சபையில் சிறுவர் கூடுகை, வாலிபர் கூடுகை நடத்தப்படுகிறது. திருமணமாகி அநேக ஆண்டுகளாக குழந்தை பாக்கியமில்லாதிருந்த அமித்ராமிற்கு ஜெபத்தைக் கேட்ட தேவன் சந்ததியைக் கொடுத்தார். வலிப்பு நோயினால் பாதிக்கப்பட்டிருந்த மந்தீப்குமாரின் சுகத்திற்காக அனேக மந்திரவாதிகளிடம் சென்றும் சுகம் கிடைக்காமல் இயேசுவின் நாமத்தில் ஜெபித்தபோது சுகமானார். மஜௌலியா பஞ்சாயத்திலுள்ள அனைத்து கிராமங்களிலும் சுவிசேஷம் முழுமையாக அறிவிக்கப்படவும், திருமுழுக்குப் பெற ஆயத்தமாக இருக்கிறவர்களுக்காகவும் மற்றும் இப்பணித்தள ஊழியருடைய மகளுக்கு ஏற்ற வாழ்க்கை துணை கிடைக்கவும் ஜெபியுங்கள்.

செப்டம்பர் 07 யோகாபட்டி

சுவிசேஷம் அறிவித்திருந்த 7 கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. இப்பணித்தளத்தின் பஜாரில் சுமார் 600 பேருக்கு சுவிசேஷக் கைப்பிரதிகள் விநியோகிக்கப்பட்டது. 3 இடங்ளில் விசுவாசிகளின் வீடுகளில் ஜெபக் கூடுகை நடத்தப்பட்டு வருகிறது. 10 — வது வகுப்பு பொதுத் தேர்வில் நல்ல மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சிப்பெற்றுள்ள விகாஷ்குமாருக்காகவும், சவேதா என்ற சகோதரிக்கு சர்க்கரை நோயிலிருந்து தேவன் கொடுத்த சுகத்திற்காகவும் துதியுங்கள்! சுவிசேஷத்திற்கு புதிய இடங்களில் வழி திறக்கப்படவும், இப்பணித்தள ஊழியருடைய பிள்ளைகளின் படிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

மைதிலிக் கோட்டம்

செப்டம்பர் 08 சிஷோ

இப்பகுதியில் நடத்தப்பட்ட மருத்துவ முகாம் வாயிலாக சுமார் 200 பேர் சரீரம் மற்றும் ஆவிக்குரிய பிரகாரமான நன்மையைப் பெற்றனர். கிரிஷ்குமார், ரஞ்சித்குமார் ஆகியோர் ஊழியர் பயிற்சி முகாமிற்கு அனுப்பப்பட்டள்ளனர். சுவிசேஷம் அறிவிக்கப்பட்டிருந்த 5 இடங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. மூக்கில் இருந்து இரத்தம் வந்துகொண்டிருந்த சரிதாதேவியின்

பெலவீனத்திற்காக ஜெபித்த ஜெபத்தைக் கேட்ட தேவன் சுகத்தைக் கொடுத்தார். தடைப்பட்டுள்ள சிறுவர் ஊழியம் தொடரப்படவும், இப்பணித்தள ஆலயத்தின் கட்டிட வேலை விரைவில் முழுமையாக முடிவடையவும், இப்பணித்தள ஊழியரின் உறவினர்களின் இரட்சிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

செப்டம்பர் 09 — பஹதுூர்பூர்

கோபால்ப்பூர், ராணிப்பூர் ஆகிய கிராமங்களில் கருணாமூர்த்தி மற்றும் கெட்டகுமாரன் படக்காட்சி இரவில் காண்பிக்கப்பட்டு, பகல் வேலையில் சுவிசேஷக் கைப்பிரதிகள் விநியோகித்து சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. தொடர் ஊழியத்தின் வாயிலாக ஷாரு, பாரோதேவி, நவநீத்குமார், பிங்கிதேவி, ரீத்தாயாதவ், ரூவேல்ஹஸன், கோமல், சம்பாபாஸ்வான், ரோசனி ஆகியோர் விசுவாசக் குடும்பத்தில் இணைந்துள்ளனர். வீட்டுசபைக் கூடுகை, சிறுவர் ஞாயிறு பாடசாலை வகுப்புகள் நடத்தப்பட்டது. சுவிசேஷத்திற்கு புதிதாக வழி திறக்கப்பட்ட கோபால்பூர் கிராமத்தில் சுவிசேஷ வாசனை முழுமையாக வீசியது. பல வருடங்களாக முதுகுத்தண்டில் காணப்பட்ட வேதனையை சகிக்க முடியாதபடி இருந்த சம்பாதேவிக்கு சர்வ வல்லவருடைய நாமத்தில் சுகம் கிடைத்தது. இப்பகுதியில் பெருத்த ஆத்தும அறுவடைக்காக ஜெபியுங்கள்.

செப்டம்பர் 10 — சீத்தாமடி

கட்டௌர், கோர்ட்பஜார், பவ்தேப்பூர், மதுபன், சக்மஹிலா, சக்மஹிலாசௌவுக் ஆகிய இடங்களில் செய்யப்பட்ட பின்தொடர் ஊழியத்தின் வாயிலாக 42 பேர் சந்திக்கப்பட்டனர். தெருப்பிரசங்கத்தின் வாயிலாக 3 இடங்களில் சுவிசேஷக் கைப்பிரதிகள் மற்றும் புதியஏற்பாடுகள் விநியோகிக்கப்பட்டது. ஓராண்டு வேதாகமப் பயிற்சிக்காக இப்பணித்தள சபை வாலிபர்கள் சுசில்குமார், ரஞ்சித்குமார் ஆகியோர் அனுப்பப்பட்டுள்ளனர். சிறுநீரகக் கல் பிரச்சினையால் வேதனைப்பட்டுவந்த ரௌதிமஹராவிற்கு ஜெபத்தால் வேதனை நீங்கியது. இப்பணித்தள சபை கட்டிடத்தை சுற்றிலும் சுற்றுச்சுவர் கட்டபடவும், மின்சார வசதி கிடைக்கவும், புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க வாசல் திறக்கப்படவும் ஜெபியுங்கள்.

செப்டம்பர் 11 — லௌகாஹி

8 கிராமங்களில் செய்யப்பட்ட பின்தொடர் ஊழியத்தின் வாயிலாக 127 பேருக்கு புதிய ஏற்பாடு விநியோகிக்கப்பட்டது. சுமார் 20 பேர் கரங்களில் சுவிசேஷக் கைப்பிரதிகள் தவழ்ந்தது. இருதய நோயால் பாதிக்கப்பட்டிருந்த நரேஷ்சௌபால், மூலநோயால் பாதிக்கப்பட்டிருந்த சதோயாதவ் ஆகியோர் விசுவாசமுள்ள ஜெபத்தால் சுகமானார்கள். சபையில் உள்ள புதிய விசுவாசிகளில் 4 பேர் ஞானஸ்நானத்திற்கு ஆயத்தமாக உள்ளனர். ஆலயம் கட்டுவதற்காக தன்னுடைய

நிலத்தை இலவசமாக தருவதாக வாக்களித்துள்ள பிந்தேஷ்வரசிங்கிற்காகவும், அடிக்கடி ஜூரத்தால் பாதிக்கப்படுகிற கோபிபிரசாதின் சுகத்திற்காகவும் மற்றும் அடிக்கடி சீரப் பெலவீனப்படுகிற இப்பணித்தள ஊழியருடைய மனைவியின் சுகத்திற்காகவும் ஜெபியுங்கள்.

செப்டம்பர் 12 பர்கனியா

இப்பணித்தள சபையில் 5 நாட்கள் நடத்தப்பட்ட விடுமுறை வேதாகமப்பள்ளிக் கூடுகையில் 107 சிறார்கள் கலந்து கொண்டனர். கலந்து கொண்ட சிறார்கள் உற்சாகத்துடன் வசனத்தையும், பாடல்களையும் கற்றுக் கொண்டனர். 4 இடங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு, வசனத்திற்கு வாஞ்சையாக இருந்தவர்களுக்கு புதிய ஏற்பாடு விநியோகிக்கப்பட்டது. சபையில் திருவசனத்தைக் கேட்டுவந்த தீரேந்திரகுமார், ஆர்த்திகுமாரி, ராஜ்கிஷோரி, பப்புகுமார் ஆகியோர் திருமுழுக்குப்பெற தங்களை அர்ப்பணித்துள்ளனர். பின்மாற்றத்தினிமித்தம் பல நாட்களாக வசனத்தைக் கேளாதிருந்த வக்கீல்தாஸ் என்பவர் வழக்கமாக சபைக்கு வர ஆரம்பித்துள்ளார். இப்பணித்தள ஊழியரின் உடன்பிறந்தவர்கள் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.

செப்படம்பர் 13 மணிகாச்சி

மஹாதேவ்போக்கர், கங்கெளலி, ராம்நகர், பிரஹம்பூர், சகரி ரயில்வேகுவாட்டர்ஸ், மணிகாச்சி ஆகிய இடங்களில் சுவிசேஷத்தைக் கேட்டவர்கள் மத்தியில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. நீண்ட நாட்களாக குழந்தைப் பாக்கியம் இல்லாதிருந்த ராஜ்குமாரியின் கர்ப்பத்தை தேவன் ஆசீர்வதித்தமைக்காக துதியுங்கள்! இவருடைய சுகப்பிரசவத்திற்காகவும், இப்பணித்தளத்தில் சொந்தமாக ஆலயம் கட்டுவதற்கு நிலம் கிடைக்கவும் ஜெபியுங்கள்.

செப்டம்பர் 14 மதுபனி

இக்கோட்டத்தின் தலைமையிடமாக இப்பணித்தளம் செயல்பட்டுவருகிறது. ஊழியர்களுக்கான ஒருநாள் கூடுகை நடத்தப்பட்டது. மங்க்ரௌனி, கோசாலா, சப்திராஹ், ஶ்ரீப்பூர், மதுபனிபஸ்டாண்ட், சங்கர்டாக்கிஷ் ஆகிய கிராமங்களில் சுவிசேஷக் கைப்பிரதிகள் விநியோகித்து சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. பின்தொடர் ஊழியத்தின் வாயிலாக ரகு, பிட்டு, பிருத்வி ஆகிய 3 வாலிபர்கள் விசுவாசத்தில் வந்துள்ளனர். கடந்த 2 வருடங்களாக தொடர் வியாதியினால் பாதிக்கப்பட்டிருந்த சந்தாதேவி விசுவாசமுள்ள ஜெபத்தால் சுகமானார். குழந்தைப் பாக்கியம் இல்லாததினால் வாழ்க்கையில் சோர்ந்திருக்கும் சோனிதேவியின் கர்ப்பம் ஆசீர்வதிக்கப்படவும், அமர்ஜித்பூரைச் சேர்ந்த விமலா மூட்டுவலியிலிருந்து சுகமாகவும், இப்பணித்தள ஊழியருடைய பிள்ளைகளின் படிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

செப்டம்பர் 15 ஆந்திரதாடி

கங்காபூர், ஜலால்பூர், மிரியா, கோவிந்பூர், மஹக் ஆகிய கிராமங்களில் 150 பேருக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டதில் 75 பேர் ஆர்வத்துடன் புதிய ஏற்பாட்டைப் பெற்றுக் கொண்டனர். தனித்தாள் ஊழியத்தின் வாயிலாக கஹராயின் கிராமத்தைச் சேர்ந்த குசேஷ்வர்சகனி, விஷ்னுசதாய் ஆகியோரது குடும்பத்தினர் ஆராதனையில் கலந்து கொள்கிறார்கள். மனநிலை பாதிக்கப்பட்டு வாழ்க்கையில் ஆனந்தமில்லாதிருந்த ஆனந்த்மஸியின் மனைவிக்கு பரம மருத்துவர் சுகத்தைக் கொடுத்தார். சபையைச் சுற்றி சுற்றுச்சுவர் கட்டப்படவும், திருமண வயதை எட்டிவிட்ட விசுவாசிகளின் பிள்ளைகளுக்களுக்காகவும், ஊழியத்திற்கு விரோதமாக இருக்கிறவர்களின் மனந்திரும்புதலுக்காகவும் ஜெபியுங்கள்.

செப்டம்பர் 16 பஹேடி

உஷரி, இனாயிடிஹ், காமேஷ்வர்நகர், கிவாஹி, மஜ்ரஹியா, ஸ்ரீப்பூர் பகடி, முசஹரி—டோலா, மதுபன், நவ்டேகா, சப்கி, பஸ்கட்டி ஆகிய 11 இடங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு, ஆர்வமுள்ளவர்கள் மத்தியில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. உபவாசக் கூடுகையில் கலந்துகொண்டு ஜெபித்தவர்கள் வாழ்க்கையில் கிடைத்த அற்புதத்திற்காக துதியுங்கள்! வேலை இல்லாமல் வாழ்க்கையில் சங்கடப்பட்டுக்கொண்டிருந்த சந்திரகுமார் சபையில் வந்து ஜெபித்தபிறகு வேலை கிடைத்தது. கர்ப்பந்தரித்துள்ள தாராதேவி, ரீட்டாதேவி ஆகியோரின் சுகப்பிரசவத்திற்காகவும், புற்று நோயினால் பாதிக்கப்பட்டுள்ள 2 வயது சிறுவன் மானம்குமாரின் அற்புத சுகத்திற்காகவும் மற்றும் இப்பணித்தள ஊழியருடைய தங்கை சோனியின் திருமணத்திற்காகவும் ஜெபியுங்கள்.

செப்படம்பர் 17 ராஜ்நகர்

சைலிபேலி, மபெளடா, லட்வா, ஜோகியா, கட்டையா, டுமரியாஹி ஆகிய கிராமங்களில் சுவிசேஷத்தைக் கேட்டவர்கள் மத்தியில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. ஜெபங்கள்நடத்தி, விசுவாசிகளுக்கு கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டது. பிசாசின் கிரியையினால் பாதிக்கப்பட்டிருந்த தர்மநாத்ராம், ராம்ஜியாதவின் மனைவி ஜெகதாரண்தேவி ஆகியோர் இயேசுவின் நாமத்தில் விடுதலையனார்கள். திருமணமாகி 14 வருடங்களாக குழந்தைப் பாக்கியம் இல்லாதிருந்த சிவ்சங்கர்ராம் என்பவரின் மனைவி கர்ப்பம் ஜெபத்தின் பலனாக ஆசீர்வதிக்கப்பட்டுள்ளது. இப்பணித்தள ஊழிருடைய இளைய மகனின் சீர ஆரோக்கியத்திற்காகவும், மூத்த மகனின் உயர் படிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

செப்டம்பர் 18 டும்ரோன்

மஹவாரி, சிக்ரெளலி, முக்ராம்பூர், பகெளரா, பாரே, பீர்பீர், ககடிஹி, நர்பத்பூர்,

கர்தர்வா ஆகிய 9 கிராமங்களில் சுவிசேஷம் வீடுகள்தோறும் அறிவிக்கப்பட்டது. பின்தொடர் ஊழியத்தின் வாயிலாக 12 பேர் புதிய தொடர்பில் உள்ளனர். ஆறு பேர் இரட்சிக்கப்பட்டார்கள். சித்தாதேவி, பப்லு ராம், வினோத்ராம், பின்துராம், ஆஷாகுமாரி ஆகிய 5 பேர் ஞானஸ்நானத்திற்கு ஆயத்தம். இரவில் சரியான தூக்கமில்லாமல் இருந்த பிரமாதேவி சபைக்கு வந்து ஜெபித்தபிறகு பிரச்சினை மாறியது. சின்னம்மை நோயினால் பாதிக்கப்பட்டிருந்த 10 வயது சிறுமி மஞ்சுகுமாரி விசுவாசமுள்ள ஜெபத்தால் சுகமானாள். அசுத்த ஆவியின் கிரியையினால் பாதிக்கப்பட்டுள்ள சோனிகுமாரியின் விடுதலைக்காகவும், பொறியியல் படித்து வேலையில்லாதிருக்கிற ரன்ஜித்குமாருக்கு வேலை கிடைக்கவும், வெகுநாட்களாக வயிற்றுவலியினால் அடிக்கடி பாதிக்கப்படுகிற இப்பணித்தள ஊழியருடைய சுகத்திற்காகவும் ஜெபியுங்கள்.

போஜ்புரி III கோட்டம்

செப்டம்பர் 19 — முங்கேர்

தனியாவா, நவ்பத்பூர், சவாஜ்பூர், பஜார்சமீதி, மனோர் ஆகிய இடங்களில் படக்காட்சி வாயிலாக சுமார் 1000 பேருக்கு வெளிச்சத்தின் சுவிசேஷம் இரவில் அறிவிக்கப்பட்டது. 2 இடங்களில் வீட்டுசபை ஆராதனை தொடர்ந்து நடத்தப்படுகிறது. இப்பணித்தளத்தில் 3 நாட்கள் நடத்தப்பட்ட விடுமுறை வேதாகமப்பள்ளிக் கூடுகையில் கலந்துகொண்ட 70 சிறார்களுக்கு வசனம் மற்றும் பாடல்கள் கற்றுக் கொடுக்கப்பட்டது. உதய்பூரில் சபைக்கட்டப்படுவதற்காக நிலம் கிடைத்தமைக்காக துதியுங்கள்! தொடர் ஊழியத்தின் வாயிலாக புதிய ஆத்துமாக்கள் ஆராதனையில் கலந்துகொள்ளவும், கையில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ள தேவ் என்பவரின் சுகத்திற்காகவும், குழந்தைப் பாக்கியமில்லாதிருக்கிற சுனித்தாவின் கர்ப்பம் ஆசீர்வதிக்கப்படவும் ஜெபியுங்கள்.

செப்டம்பர் 20 — மகுவா

கனோலி, மன்சன்னி கிராமங்களில் சுவிசேஷம் வாசனையாக கடந்து சென்றது. புதிதாக ஆலயம் கட்டப்பட்டுள்ள மாதேபூர் (நிஜ்மா) பகுதியில் மிகுந்த எதிர்ப்புளுக்கு மத்தியில் ஞாயிறு ஆராதனை நடத்தப்பட்டு வருகிறது. விசுவாசிகளின் பிள்ளைகள் விவேக், ராஜன், விகாஷ், ராஜ்வீர், தர்மேந்தர், பூணம், சுமன் ஆகியோர் 10ம் வகுப்பு பொதுத் தேர்வில் வெற்றிப் பெற்றுள்ளனர். இப்பணித்தள ஊழியருடைய சகோதரர் அஜய்யின் திருமணம் ஆசீர்வாதமாக நடைபெற்றது. ஊழியத்திற்கு எதிர்ப்பு தெரிவித்துவரும் உயர் ஜாதியினர் (ராஜ்புத்) மத்தியில் ராஜாதி ராஜா கிரியை செய்யவும், ஆலயத்தின் சுற்றுச்சுவர் கட்டப்படவும், வலிப்பு நோயினால் பாதிக்கப்பட்டுள்ள வாலிபன் விகாஷின் சுகத்திற்காகவும் மற்றும் இப்பணித்தள ஊழியருடைய குடும்பத்திற்காகவும் ஜெபியுங்கள்.

செப்டம்பர் 21 சம்பத்சௌவுக்

இப்பணித்தளத்தைச் சுற்றியுள்ள 3 இடங்களில் படக்காட்சி வாயிலாக சுமார் 500 பேருக்கு சுவிசேஷம் கடந்து சென்றது. 'இயேசு நம் மத்தியில்' என்ற சுவிசேஷப் புத்தகங்கள் அவர்கள் மத்தியில் விநியோகிக்கப்பட்டது. திரைப்பட ஊழியத்தின் வாயிலாக 2 குடும்பத்தினர் புதிதாக ஆராதனையில் கலந்துகொள்கிறார்கள். பில்வாரா கிராமத்தில் செய்யப்படுகிற தொடர் ஊழியத்தின் வாயிலாக அநேகர் இரட்சிக்கப்படவும், பின்மாற்றத்தில் உள்ள சுஜித், ரவி, சன்னி ஆகியோர் மீண்டும் சபை ஆராதனையில் கலந்துகொள்ளவும், இப்பணித்தளத்தில் சொந்தமாக ஆலயம் கட்டி எழுப்பப்படவும் ஜெபியுங்கள்.

செப்டம்பர் 22 ஜமால்பூர்

லட்சுமன்பூர், தௌலத்பூர், கோவிந்த்பூர், ஒலிபூர் ஆகிய இடங்களில் விசுவாசிகளின் வீடுகளில் ஜெபக் கூடுகை நடத்தப்பட்டது. ஷோபாதேவி வீட்டில் இரவுக் கூடுகை நடத்தப்பட்டது. சபையில் 3 நாட்கள் நடத்தப்பட்ட உபவாச ஜெபக் கூடுகையில் 30 பேர் கலந்து கொண்டனர். திடீரென்று மயங்கி விழுந்த ஷோபாதேவியின் மகளுக்கு இந்தப்பணித்தள ஊழியர் ஜெபித்தபிறகு அந்த பெலவீனம் நீங்கியது. ஞானஸ்நானத்திற்கு ஆயத்தமாக இருக்கிறவர்களுக்காகவும், வாலிபர்கள் மத்தியில் தேவன் கிரியை செய்யவும் மற்றும் இப்பணித்தள சபையின் விசுவாசிகளின் குடும்பங்களில் காணப்படும் ஏழ்மைநிலை மாறவும் ஜெபியுங்கள்.

செப்டம்பர் 23 மனேர்

இப்பணித்தள சபை ஆராதனைக்கு 17 கிராமங்களில் இருந்து விசுவாசிகள் வருகிறார்கள். பாஜித்பூர், பவானிடோலா ஆகிய கிராமங்களில் படக்காட்சி வாயிலாக சுமார் 600 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. விசுவாசிகளின் குடும்பங்கள் சந்திக்கப்பட்டது. திருவிருந்து ஆராதனையில் 55 பேர் கலந்துகொண்டார்கள். பொய் வழக்கினால் சிறைச்சாலையில் இருக்கும் துதய்வாவைச் சேர்ந்த புலேந்தரசிங்கின் விடுதலைக்காகவும், நிலப்பிரச்சினையில் மற்றவர்களால் ஏமாற்றப்பட்ட மங்கீதாதேவிக்கு நியாயம் கிடைக்கவும் மற்றும் இப்பணித்தள ஊழியருடைய பிள்ளைகளின் படிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

செப்டம்பர் 24 கோராவூல்

பஹாபல்பூர், ஹலயா, சேர்புரா ஜலால், பிசன்பூர் அட்ரா, ராம்தாஸ்பூர் ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு 165 பேருக்கு இயேசு நம் மத்தியில் சுவசேஷப் புத்தகம் விநியோகிக்கப்பட்டது. ஷீலாதேவி, காந்திதேவி, சூரஜ்குமார், பங்கஜ்குமார் ஆகியோருக்கு தனித்தாள் ஊழியம் செய்யப்பட்டது. அனேக நாட்களாக வியாதிப்பட்டிருந்த முன்னா, கிரண்தேவி ஆகியோர் விசுவாமுள்ள

ஜெபத்தால் சுகமானார்கள். சுவிசேஷம் அறிவிக்கப்பட்ட இடங்களில் தடையின்றி தொடர் ஊழியம் செய்யப்படவும், இப்பணித்தளத்தில் சொந்தமாக ஆலயம் கட்டுவதற்கு நிலம் வாங்கப்படவும் மற்றும் கல்லூரியில் படித்துவருகிற இப்பணித்தள ஊழியருடைய மகளுக்காகவும் ஜெபியுங்கள்.

செப்டம்பர் 25 பாட்டம்

பரம பஞ்சாயத்திறகு உட்பட்ட இப்பணித்தளத்தில் பரமனின் சுவிசேஷ வாசனை வீசுகிறது. சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுவந்த 5 கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டுவருகிறது. வெள்ளிக்கிழமை நடத்தப்படுகிற உபவாசக் கூடுகையில் புறஜாதி மக்கள் விசுவாசத்தோடு கலந்து கொள்கிறார்கள். அடிக்கடி சீரர வேதனையோடு கஷ்டப்பட்டுவந்த அனித்தாதேவி ஜெபத்தால் சுகமானார். பகுலதா கிராமத்தில் விசுவாசிகளின் எண்ணிக்கை பெருகிக்கொண்டு வருவதற்காக துதியுங்கள். இப்பஞ்சாயத்திகுட்பட்ட அனைத்து கிராமங்களில் சுவிசேஷம் முழுமையாக அறிவிக்கப்படவும், பின்மாற்றத்தில் உள்ள பழைய விசுவாசிகளுக்காகவும் ஜெபியுங்கள்.

செப்டம்பர்26 மொக்கம்மா

இப்பணித்தள சபையில் நடத்தப்பட்ட ஞானஸ்நான ஆராதனையின் வாயிலாக சாந்தினிகுமாரி, சஞ்ஜித்குமாரி, மனிஷாகுமாரி, சரிதா மசி, பைஞ்சன் ஆகியோர் ஞானஸ்நானம் பெற்றனர். ஞாயிறு ஆராதனையில் 50 விசுவாசிகள் கலந்து கொள்கிறார்கள். மொக்கம்மா, லக்கிசராய், பஹ்வன்பீஹா ஆகிய 3 இடங்களில் ஆராதனை நடத்தப்பட்டுவருகிறது. நவீன், ராபின், மோனு, மனிஷாகுமாரி ஆகியோர் வேதபாட பயிற்சி வகுப்பில் கலந்து கொள்கின்றனர். அனிதா மசி, அனில்குமார் புதிதாக ஆராதனையில் கலந்து கொள்கிறார்கள். பிசாசின் கிரியையினால் பாதிக்கப்பட்டு, விடுதலைக்காக அனேக மந்திரவாதிகளிடம் சென்றும் விடுதலையாகமல் சலித்துப்போன சஞ்ஜித்குமாருக்கு இயேசுவின் நாமத்தில் ஜெபித்தபோது விடுதலை கிடைத்தது. இப்பணித்தளத்தில் சொந்தமாக ஆலயம் கட்டப்படவும், பின்மாற்றத்தில் உள்ள பழைய விசுவாசிகளுக்காகவும் மற்றும் இப்பகுதியில் உள்ள பாரம்பரிய கிறிஸ்தவர்கள் இரட்சிக்கப்படவும் ஜெபியுங்கள்.

நேபாள் ஊழியங்கள்

செப்டம்பர் 27 நாவல்பூர்

ஷர்லாஹி பஞ்சாயத்திற்குட்பட்ட தோல்கா, சிந்துபால்சௌக் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு, ஆர்வமுள்ளவர்கள் மத்தியில் பின்தொடர் ஊழியம் செய்யப்படுகிறது. ஹட்டௌடா பகுதியில் நடத்தப்பட்ட நற்செய்தி கூட்டத்தின் வாயிலாக 200 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. விசுவாசிகளின் குடும்ப

சந்திப்பு ஊழியம் நடத்தப்பட்டது. இப்பணித்தள ஊழியர் கண்காணிப்பில் உள்ள ஏழை சிறுவர்களின் படிப்பு மற்றும் ஆவிக்குரிய வாழ்க்கைக்காகவும், சுவிசேஷத்திற்கு புதிய இடங்களில் வழி திறக்கப்படவும் மற்றும் இப்பணித்தளத்தில் சொந்தமாக ஆலயம் கட்டப்படவும் ஜெபியுங்கள்.

செப்டம்பர் 28 ஜப்பனி

பூகம்பத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மத்தியில் நிவாரணப்பணி செய்யப்பட்டுவருகிறது. ஷர்லாஹி, தோல்க்கா, சிந்துபால்சௌக், சிந்தௌலி, ராமிச்சப், தலால்கட், கீபிரி ஆகிய இடங்களில் 'இயேசு நமது மத்தியில்" சுவிசேஷப் புத்தகம் மற்றும் புதியஏற்பாடு விநியோகிக்கப்பட்டது. இப்பகுதியில் பூகம்பத்தால் பாதிக்கபட்டு தங்களது உறவினர்களையும், உடமைகளையும் இழந்து வேதனையோடு இருக்கும் மக்களுக்கு தேவன் ஆறுதலைக் கொடுக்கவும், பொது ஓவியப் போட்டியில் பங்கேற்கவுள்ள இப்பணித்தள ஊழியருடைய மகளுக்காகவும் மற்றும் சொந்தமாக ஆலயம் கட்டப்படவும் ஜெபியுங்கள்.

செப்டம்பர் 29 ஜப்ரஹா

ஹெட்டௌடா, ஹர்தா, ஹீராமுனி, மம்தமார், கர்மச்சூலி ஆகிய நடத்தப்பட்ட 3 உபவாசக் கூடுகையில் விசுவாசிகள் இணைந்து நேபாள தேசத்திற்காக ஜெபித்தார்கள். இப்பணித்தள சபையில் ஞாயிறு ஆராதனை, பெண்கள் சிறப்புக் கூடுகை தடையின்றி நடத்தப்படுகிறது. நிவாரணப் பணியில் விசுவாசிகள் உற்சாகமாக உதவி செய்தார்கள். சீரப் பெலவீனப்பட்டிருந்த பவானி என்ற சகோதரி விசுவாசிகளின் ஜெபத்தால் சுகமானார். இப்பணித்தள ஊழியருக்குக் காணப்படும் எதிர்ப்புகள் மாறவும், கடின இருதயமுள்ள இப்பகுதி மக்கள் மனதில் தேவன் கிரியை செய்யவும் ஜெபியுங்கள்.

செப்டம்பர் 30 ஜீத்பூர்

சிந்தௌலி, ராமிச்சப், தலால்கட் ஆகிய இடங்களில் செய்யப்பட்ட நலத்திட்டங்கள் வாயிலாக கிறிஸ்துவின் அன்பு பறைசாட்டப்பட்டது. விசுவாசிகளின் வீடுகளில் வீட்டுசபை ஆராதனை நடத்தப்படுகிறது. வியாதிப்பட்டு மருத்துவரால் கைவிடப்பட்ட கைக்குழந்தைக்கு பரம மருத்துவர் அற்புத சுகதக்கைக் கொடுத்தார். கர்ப்பப்பையில் பெலவீனத்தோடு இருந்த ராஜி என்ற சகோதரி ஜெபத்தால் சுகமானார். ஷர்லாஹி, தோல்க்கா, சிந்துபால்சௌக், சிந்தௌலி, ராமிச்சப், தலால்கட் ஆகிய மாவட்டங்களில் ஊழியத்திற்கு வாசல் திறக்கப்படவும், இரண்டு வயதாகியும் சரியாக வாய் பேசமுடியாதபடி இருக்கிற இப்பணித்தள ஊழியருடைய பெண் குழந்தைக்காகவும் ஜெபியுங்கள்.

GEMS ACTION CENTERS

CHENNAI	8,3rd Jeevan Nagar, Adambakkam, Chennai - 600088, Ph. : 044-22670099
CHENNAI	16, Perumal Kovil Street, Nerkundram-600107 Cell: +919444017330
COIMBATORE	No. 2, Anbu Nagar, 4th Street, Vadavalli Road, Edayarpalayam, Coimbatore - 641025 Mobile : +919344824072
DINDUGAL	43/20C, Samiyar Thottam, Nagal Nagar, Dindugal-624003. Cell:+919942824035
ERODE	No.34/20, Murugesan Nagar Main Road, Kumalankuttai, Erode-638011. Cell : +919486976202
KODAIKANAL	143-2, Packiapuram, Kodaikanal-624101. Cell : +919443221776
KOVILPATTI	11, Theppakulam street, Kovilpatti-628501. Ph.: 04632-225890
MARTHANDAM	N.S.Building, Kulasekaram Road, Marthandam, K.K.District-629165. Cell:+919788689771, +919486357950
NAZARETH	No:3,Dasan street,Nazareth-628 617,Ph;9442094110
SIVAKASI	3/1350/9, Sattur Road, Parraipatti, Sivakasi-626189. Cell: +919843088840
NAGERCOIL	66-E,Bright street, Nagercoil-629009. Cell:+919894965520, +9194883 35666
TUTICORIN	38, Sarangapani street, Tuticorin-2. Cell:+919442210629
TUTICORIN	J.S.Traders, Hotel Geetha Complex, Polepettai, Tuticorin- 628002. Cell: +919442166061
VELLORE	Shalom Cottage, 52, Vana Nagar, Alamelumangapuram, Vellore-632009. Cell: +919952545181

REGIONAL ACTION CENTERS

CHENNAI	Plot No. 19-A, 3rd st.,Megala Nagar, Vengaivasal-600073. Cell: +919444763141
COIMBATORE	No. 7, Laxmi Puram, !st Cross, EB Colony, TVS Nagar, Coimbatore - 641025. Cell: 9442934613
MADURAI	Plot No. 21, Sharon church street, Booman Nagar-625018. Cell: +919865583563
TRICHY	Mahanaim, 1, Abdul Gazoor street, Kajah Nagar-620020. Cell:+919443555577
TIRUNELVELI	14/109 A, 10th Street, Shanthi Nagar, Palayamkottai-627 002, Cell ph: +9194431 13322.

OTHER STATE ACTION CENTERS

BANGALORE	No. 10, 4th Cross (2nd floor) Oil Mill Road, Lingarajapuram, St.Thomas Town P.O, 560084. Cell:+919448517025
NAVI MUMBAI	104, Amandmath, Plot 15, Sector 19, Nerul East, Navi Mumbai -400706. Cell:+919322730294, +919820701775
PONDICHERRY	No.5, Kamarajar Street, Tagore Nagar, Lawspet, Pondicherry -605008. Cell: +919486796631
KERELA	No.4 N.V.Nagar, Peroorkada (P.O), Trivendram, Kerala - 682005, Ph: +919486357950

GENERAL ACTION CENTER

GEMS, 16-A, Chinna Koil street, Adaikalapuram, Murugankurichi, Tirunelveli-627002.
Ph.:0462 2581131 Cell:+919443429735, Email:promotions@gemsbihar.org

என்
இந்திய தேசம்
இயேசுவை அறியட்டும்
ஒருமுறை அறியாதோருக்கும்
திருமறை சேரட்டும்
இருளில் இருப்போர்
இனி ஒளியில் வாழட்டும்
பிஞ்சு விரல்களுடன்
நெஞ்சு நிறைந்து
அக்காலத்தையே
காணக் காத்திருக்கிறேன்
பதில் தா இறைவா!

GEMS Media

புதிய வெளியீடுகள்

ஒருமுறையாவது கேளுங்கள்,
ஒருவரையாவது கேட்கச் செய்யுங்கள்

GEMS Educational Media Services

Regd. office :

11,13th Cross Street, New Colony,
Chrompet, Chennai - 44
Ph : 044-22386031, 044-22380295

Field. office :

GEMS, Sikaria, Indrapuri - 821 308
Rohtas Dist., Bihar. Ph. : 06184 234567

(Railway station & couriers centre : Dehri-on-Sone)
Website : www.gemsbihar.org.
E-mail : gems@gemsbihar.org

GEMS Action Center

GEMS, 16-A, Chinna Koil Street,
Adaikalapuram, Murugankurichi,
Tirunelveli - 627 002. Ph : 0462-2581131
E-Mail : nellaioffice@gemsbihar.org

To

....

....

....

....

Private circulation

தனிப்பிரதி ரூ. 10/-
ஆண்டு சந்தா ரூ. 100/-